ஓம்

மூடமதி திறவுகோல்

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்)

65, திருப்பள்ளி தெரு, மதராஸ்-1

விலை] 1952 [0-1-0

ஓம்

மூடமதி திறவுகோல்.

விருத்தம்

ஞான மெட்டுத் திசையும் பாவிய
ஆலவட்ட மமர்ந்த கடவுள்சேர்
கோலவட்டக் குழந்தை மதிமுகம்
மூலவட்ட முதற்பொருள் போற்றுவாம்.

வெண்பா

யெத்தொழிலைச் செய்தாலும் யேதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்
காதிவிளையாடியிரு கைவீசிவந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

விருத்தம்

ஏதப்பா பெண்டீரா லாவதென்ன
ஈன்றெடுத்த பிள்ளைகளா லாவதென்ன
கோதப்பா விந்துவினு லாவதென்ன
கொண்டதினுல் கொடுப்பதினு லாவதென்ன
வாதப்பா சொல்ல நித்தம் அலைந்தே தேடும்
மகத்தான திரவியத்தா லாவதென்ன
போதப்பா போதமென்ற போதம் பார்த்தால்
பொருளுனக்கு லாபமுண்டு புகழ்ந்துகொள்ள.

பாம்பாட்டி சித்தர்

பரிகாசம்போலவே கடித்தபாம்பு அங்கு
பலபேரறியவே மெத்தவீங்கிப்
பரிகாரமொருமாது பார்த்தபோது அது
பையோடே சுழன்றதென் றூடுபாம்பே.

களிமண்ணினுலொரு கப்பல்சேர்த்து
மனமான ஓங்கார பாய்மரம்கட்டி
நளினரீங்காரம் தன்னைப்பூட்டி
நாடியே ஓடுதென் றூடுபாம்பே.

ஊத்தைக்குழியிலே மண்ணையெடுத்து அந்த
உதிரப்புனலிலே உண்டைசேர்த்து
வாய்த்தகுயவனுர் பண்ணும்பாண்டம் வர
ஓட்டுக்குமாகாதென் றூடுபாம்பே.

அன்னை தந்தையர்களைத் தெய்வமென்று தினம்
அன்பாயவர்பாதம் பூசைசெய்து
தன்னைமறந்துக் கொண்டோரிடத்தில்
சற்குருபாதங்கண் டாடுபாம்பே. 4

ஆதிபராபர வஸ்துவான எங்கள்
அய்யன் திருவடி தினம் துதித்து
ஜோதிமயமான சுத்தப்பொருளை
சூட்சமாய்க்கொண்டேனென் றாடுபாம்பே. 5

வாசியைதானடக்க மனக்குரங்கை
மதியாமல்தானறிந்து சுழியிலேற்றி
தேசிகன் திருவடி தினம்பணிந்து
சித்தத்தைதுதித்து நின்றாடுபாம்பே.

விருத்தம்

நீர்தனில் முழுகும்போது பொருள்மேலாசை
நிலையானகரையில் வந்தால்நிலமேலாசை
கூர்நெற்றிதனில்வெண்ணீ றணியும்போது
குறிப்பான மக்கள்பெண்டீர்கள் சுற்றத்தாசை
ஊர்தனிலேமந்திரங்க ளோதும்போது
உற்றபசியாறமண மதின்மேலாசை
பார்தனிலேதேவாரம் ஓதும்போது
பலவிதமாய் மனமோடுவதை உற்றுப்பார்.

கலித்துறை

ஓடியலைந்து இவ்வையகமுற்றும் உழன்றுழன்று
தேடியெடுத்த திரவியம்யாவையும் நீசெத்தபின்பு
நாடியெடுப் பதுவுமுண்டோ மறந்துநடக்கும்நெஞ்சே
வாடியிருந் தறம்செய்தால் குணங்குடி வாய்த்திடுமே.

பல்லவி

கருமம் விடாது பூர்வஜென்மத்தில்செய்த
பாவம் விடாது ஒருவர்க்குநீசெய்த
தோஷம் விடாது

சரணங்கள்

சிரசைமழுங்கடித்து ஸ்தலமெல்லாந்திரிந்தாலும்
தாடிசடைவளர்த்து குருவென்று அலைந்தாலும்
இரவும்பகலும்ஜெப மாலையையிழுத்தாலும்
ஈசனும் தலையிலே யெழுதினபடியல்லால் கரு

தாலைமாலைமூன்று	வேளையுங்குளித்தாலும்	
கட்டாகவிபூதி	பட்டையாயடித்தாலும்	
தானைத்திறக்காமல்	மந்திரம்படித்தாலும்	
தலையிலேநான்முகன்	லெழுதினபடியல்லால்	கரு
காவடிதூக்கினீ	காசிக்குப்போனாலும்	
கண்மூடிவாய்மூடி	மௌனமாயிருந்தாலும்	
தேவாலயங்கட்டி	திருவிழாசெய்தாலும்	
தீக்கோட்டைநடுவிலே	யாகம்வளர்த்தாலும்	கரு
தீர்த்தமுழுதுங்கண்டு	ஸ்நானங்கள்செய்தாலும்	
தெரியாமல்குகைக்குள்ளே	திருடன்போலிருந்தாலும்	
பார்த்தவர்பிரமிக்க	வேடங்கள்பூண்டாலும்	
பகலும்இரவும்தினம்	விரதங்கள்இருந்தாலும்	கரு
கஞ்சாவபினித்தின்று	காஷாயம்பூண்டாலும்	
காடேநித்யமென்று	மரவுரிதரித்தாலும்	
தஞ்சமாய்க்குருவடி	பணிவிடைசெய்தாலும்	
தன்னையறியவென்று	மலையேறிப்போனாலும்	கரு
ஊசிகாட்டிக்காலை	ஊன்றிக்கொண்டிருந்தாலும்	
யோகத்தடியின்மீது	சவம்போலேகிடந்தாலும்	
பேசாமல்மலையேறி	பெருந்தவஞ்செய்தாலும்	
பெண்டுபிள்ளைகளென்ற	சிந்தையைமறந்தாலும்	கரு
திருப்பதிமலையேறி	தலைமொட்டையடித்தாலும்	
ஸ்ரீரங்கம்தனிற்சென்று	தெருவெல்லாம்புரண்டாலும்	
விரிதலைகொண்டாலும்	வேதத்தைப்பிடித்தாலும்	
விட்டோடும் ஆவியைத்	தாவிப்பிடித்தாலும்	கரு
அக்கினிபந்துபண்ணி	அனலுக்குள்ளிருந்தாலும்	
அல்லாமல்ஜலத்தில்	தெப்பம்போலிருந்தாலும்	
திக்கட்டதிசைகட்ட	சித்துகளானாலும்	
தீண்டினபொருளெல்லாம்	பொன்னாகச்செய்தாலும்	கரு
காளிசூளிகளெல்லாம்	வசியமாய்ப்போனாலும்	
காட்டேரிகாத்தானை	யேவலாய்க்கொண்டாலும்	
யாளிபோல் ஆகாசக்	குளிகையேகற்றாலும்	
யாருக்குந்தெரியாமல்	உருமாறித்திரிந்தாலும்	கரு
துளசிமணியைக்கோர்த்துத்	தாவடம்பூண்டாலும்	
தூங்காமல்சிலநாளைக்	கருசண்டம்பூண்டாலும்	
அளவற்றமந்திரம்	ஆற்றோரஞ்செபித்தாலும்	
அன்னமுஞ்சொர்ணமும்	அள்ளியிரைத்தாலும்	கரு

இல்லவல்லாவென்றுநீ ஏழுகடலலைந்தாலும்
இல்லாமல்ரகுமானை மறவாமல்தொழுதாலும்
வல்லவன்யேசென்றும் வாய்கொண்டழுதாலும்
வாட்டுத்தவளைபோலே பைபிலைபடித்தாலும் கரு

தன்னையறிந்தாப்போல் சன்யாசம்பூண்டாலும்
தானேசகலமென்று வாயாடித்திரிந்தாலும்
பொன்வெள்ளிசெய்தாலும் புசியாமலிருந்தாலும்
போதிக்குங்குருவென்று மடத்துக்குள்ளிருந்தாலும் கரு

உலகத்தில்வெகுகோடி மூடமதிகளுக்கு
உண்மையொன்றில்லாத பொய்யாக்கும்பேயர்க்கு
சகலர்க்குந் தெளிவாக சிறுமணவூர்முனுசாமி
சாற்றியதிறவுகோல் பாரதபெரியோர்க்கும் கரு

சிவவாக்கியம்

காணவேணு மென்றுநீர் கடல்மலைக ளேறுவீர்
ஆணவம தல்லவோ அறிவிலாத மூடரே
வேணுமென்ற ஈசர்பாதம் மெய்யுளே விளங்கினால்
காணலாகும் நாதனைக்கடந்துநின்ற சோதியை. 1

ஓடியோடி யோடியோடி உட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மானிடர்
கோடிகோடி கோடிகோடி யெண்ணிறந்த கோடியே. 2

தூரதூர தூரமென்று சொல்லியோடும் வீணரே
பாரும்விண்ணு மெங்குமாய்ப் பறந்துபோய்ப் பராபரம்
ஊருநாடு காடுபோ யுழன்றுதேட வேணுமோ
நேரதாக உம்முளே நினைத்தறிந்து கொள்ளுமே. 3

நட்டுவைத்த தேவரும் நடாமல்வைத்த தேவரும்
சுட்டுவைத்த தேவரும் சுடாமல்வைத்த தேவரும்
கட்டிவைத்த புத்தகக் கதைகளின் புரட்டெல்லாம்
கெட்டதாய் முடிந்ததே பிராணனையுணர்ந்தபின். 4

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ் சாற்றியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்த்ர மேதடா
நட்டகல்லு பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை யறியுமோ. 5

ஓசையற்ற கல்லைநீர் உடைத்துருக்கல் செய்கிறீர்
வாசலில் பதித்தகல் மழுங்கவும் மிதிக்கிறீர்
பூசைபெற்ற கல்லிலே பூவும்நீறும் சாற்றுறீர்
யீசனுக் குகந்தகல் யிரண்டுகல்லு மல்லவே. 6

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்க ளெத்தனை
பாழிலே ஜெபித்துவிட்ட மந்திரங்க ளெத்தனை
மிண்டனாய் திரிந்தபோ திரைத்தநீர்க ளெத்தனை
மீளவும் சிவாலயங்கள் சுற்றிவந்த தெத்தனை. 7

அண்டர்கோ னிருப்பிடம் அறிந்துணர்ந்த ஞானிகள்
அண்டர்கோ னிருப்பதை அறிக்கையிடார் தானுமே
கண்டகோவில் தெய்வமென்று கண்டுணர்ந்த ஞானிகள்
கண்டகோவில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே. 8

விருத்தம்

எத்தனைதான் கல்லுகளைப் பூசித்தாலும்
ஈனர்களே உங்களுக்கு மோக்ஷமுண்டோ
சுத்தமுடன் தலைமுழுகித் தவஞ்செய்தாலும்
சொல்லரியபேரின்பந் தோன்றுமோதான்
பித்தர்களே கல்லுகளை விலைக்குவாங்கி
பிரானென்றசிலையிலே முடிந்துகொண்டு
செத்தபின்புகைலாயம் சேர்வோமென்றால்
சேர்வதில்லையருநரகம் சேர்வீர்தானே. 1

சற்குருவையறியாம லுலகிலேதான்
சண்டாளர்கல்லுகளைத் தெய்வமென்று
பொய்குருக்கள்சொன்ன புத்திகளைக் கேட்டு
பூசைசெய்துகல்லுகளைப் போற்றிசெய்வார்
சொற்குருக்கள்தங்களுட செய்திகேட்டால்
சொர்க்கமுண்டோ நரகமெலாம்செல்லும்போது
சற்குருவையறிந்தவருக் குடனேமோக்ஷம்
சார்வதென்றேமுன்னோர்கள் சாற்றினாரே. 2

கருப்பேய்கள்கரப்பேய்கள் காமப்பேய்கள்
கனதனத்துப் பொருட்பேய்கள் வசனப்பேய்கள்
மருட்பேய்கள்மனப்பேய்கள் வழக்குப்பேய்கள்
வண்ணமையில்லாக்குலப்பேய்கள் வாதுகூறும்
இருட்பேய்கள்சமயமத மேற்றும்பேய்கள்
இயலாதமந்திரங்க ளோதும்பேய்கள்
குருப்பேய்கள் தங்களுட பெருமைதன்னை
குவலயத்தில்கூறுவது குற்றந்தானே. 3

தன்னைத்தானறியாத மூடரெல்லாம்
தானுலகில் குருக்களென்றுபெயரும்சொல்வார்
பின்னைத்தான் பிறவாதநெறியுங்காணார்
பேசாதமரத்தின் பெருமைகாணார்
முன்னை பெரியோர்கள்சொன்ன நூலின்முறைமை
முற்றுமதனையறியார் மூடரெல்லாம்
என்னத்தான் சிஷருக்கு புத்திகாட்டி
ஈடேறக் கொடுப்பதுவு மியல்பில்லாரே. 4

அடியற்றமரம்போலே தெண்டனேது
அரகராவென்றமொழிக் கர்த்தமேது
பிடிப்பட்டகள்ளரைப்போல் கும்பிடேது
பேசாமல்பூற்பலவாய் பினத்தலேது
கொடியிட்டமரத்துக்கு சுத்தங்களேது
கும்பிட்ட கோவிலுக்கு குறிகளேது
வடிவற்றதிருவருளை மனதில்வைத்தால்
வண்மையுடன் பரமபதம் வாழலாமே. 5

பின்முடுகு ஆனந்தக்களிப்பு

மனைவியே உனக்கொல்லும் யெமனடா அவள்
எமனடா னமனடா பேயடா பூதண்டா (மனைவி)

கையிற்கு வளையலென்றும் மாட்டுவாள் அவள்
கலையென்பாள் பணியென்பாள் தலைக்கென்னை
[தாவென்பாள்

உண்டிக்கேதினம் வாட்டுவாள் நல்ல
உடையென்பாள் படையென்பாள் நடையென்பாள்
[யிடமென்பாள்

பிள்ளையே உன்கால் விலங்கடா அது
விலங்கடா கயறடா வலையடா உலையடா (மனைவி)

உறவே உனைவாட்டும் புலியடா அது
புலியடா கிலியடா கனையடா மலையடா (மனைவி)

பணமே உனைவெட்டும் கத்தியடா அது
கத்தியடா கீத்தியடா உளியடா வாளடா (மனைவி)

திக்குத்திகந்தமும் கொண்டாடியேவந்து தீன்கூறி நிற்பர்கோடி, சிம்மாசனுதிபர்களதை யேத்தியேவந்து ஜெயஜெயா வென்பர்கோடி, அக்கணருள் பெற்றபெரியோர்க ளொளிமார்கள் அணியணியாக நிற்பர்கோடி அஞ்ஞானம் வேரறுத்திட்ட மெஞ்ஞானக ளனைந்தகுரு நிற்பர்கோடி, மக்கநகராளும் மூஹம்மது ரசூல்தந்த மன்னரே யென்பர்கோடி, வசனித்துநிற்கவே கொலு வீற்றிருக்குமும் மகிமைசொல வாயுமுண்டோ, தக்கபெரியோனருட் டங்கியே நிற்கின்ற தவராஜ ஜெகமேருவே தயைவைத் தெனையாளும் தற்குணம் குடிகொண்ட ஷாகுல் ஹமீதாசரே.

ஆனந்தகளிப்பு

உச்சிக்குநேரே கிழக்கு இந்த
ஊருக்குமேலே பேரொளிதன்னில்
பச்சைபுருவந்து மேயும் அந்த
பாங்குடன்மெள்ளப் பழகிப்பிடித்துக்
கச்சைக்கயிற்றாலே கட்டி கலி
மாயையென்னுந் தேனைக்கலந்துபுகட்டி
அச்சமில்லாக்கூட்டி லடைத்து நம்ம
ளாதியைநன்றாக கண்டுக்கொண்டேனே
தீன் தீன் முகம்மது தீனே.

மூடமதி திறவுகோல் முற்றிற்று.

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்) 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1